மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உளுந்தூர்ப் பேட்டையில் உள்ள பழைய விமான தளத்தைப் புதுப்பித்தால் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் நெய்வேலி, பாண்டிச்சேரி போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க வசதி ஏற்படும். எனவே அது புதுப்பிக்கப் படுமா? அதோடு அந்த இடம் தற்பொழுது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது? யாருடைய பொறுப்பில் அது இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அந்த விமான தளத்தைப் புதுப்பிக்கின்ற எண்ணம் அரசுக்குத் தற்போது இல்லை. இது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருந்து வருகிறது. இந்த விமானதள இடத்தை அரிசன மற்றும் மலைசாதி வகுப்பினருக்கு வீடு கட்ட எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றியும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

வேலூர்—நாகர்கோயில் விரைவுப் பேருந்து.

*வினா எண். 207—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு மே மாதத்தில் வேலூரிலிருந்து நாகர்கோவில் செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த துரித வண்டி, திருவண்ணாமலைக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதா?

(ஆ) ஆம் எனில், அதனால் பொதுமக்களுக்கும் அவர்களுடைய உடமைகளுக்கும் சேதாரம் உண்டா?

(இ) சேதாரத்திற்கு நட்ட ஈடு தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம். 8—5—1978 அன்று திருவண்ணாமலையில் அந்த விபத்து நடந்தது.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் அங்கே விவசாயிகள் மூன்று, நான்கு மாட்டு வண்டிகளில் வந்த பொழுது இரண்டு மாட்டு வண்டிகள் நொறுங்கியிருக்கின்றன, இரண்டு மாடுகள் செத்திருக்கின்றன. அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழக மேனேஜிங் டைரக்டருக்கு வக்கீல் நோட்டிஸ் கொடுத்திருக்கிறார்கள். நான் இரண்டு முறை பார்த்து, நஷ்டஈடு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். விபத்துக்குள்ளானவர்களின் மாட்டு வண்டிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அவர்கள் ஏழை எளியவர்கள், எனவே அதற்குத் தகுந்த நஷ்டயீட்டைத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த விபத்திலே நான் உயிர்ச்சேதம் இல்லையென்று கூறினேன். ஆனால் மாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்பு எனக்குத் தரப்படவில்லை. ஆனால் இந்த விபத்திலே, லாரி ஒன்று பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்திலே மோதிய காரணத்தாலேதான் விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், புலனாய்வில் லாரிதான் அதற்குக் காரணம் என்றும் லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்திருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து அந்த விபத்துக்குக் காரணமாக இருந்தால்தான் விதிமுறைப்படி நட்டஈடு கொடுக்க முடியும். அதுபற்றி, விவரம் தெரிந்து நடவடிக்கை எடுக்கிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி.

*வினா எண் 208—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு P. F. பிடிக்கும் சட்டம் கொண்டுவர அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புத் தொகை பிடிக்கும் சட்டம் 31—5—1977 முதல் கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.